★ ஜெனிவாவுடன் பிரதிநிதிகள் தொடர்பு

# ஐ. நா. ஆதரவுடன் குடாநாட்டில் அகதிமுகாம்?

தற்போதைய சூழ்நிலையில் அவசியம் பெரிய அகதி முகாம் ஒன்று குடா நாட்டின் மத்திய பகுதியில் அமைக்கப்படவேண்டும் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகள் ஜெனிவாவில் உள்ள தலைமை அலுவலகத்திடம் கேட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தில் இருபதினாயிரத்துக்கும் அதிகமான அகதிகள் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் வெளியேறி வருவதால் இம்முகாமை அவசியம் திறக்குமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அத்தியாவசியமான முகாம் அமைக்கப்படாவிடில் எதிர்காலத்தில் அகதிகள் பட்டினிச் சாவையும், நோயையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை அகதிகளுக்கான ஐ. நா. பிரதிநிதிகளின் இந்த முயற்சிக்கு இலங்கை அரசு மறுப்புத் தெரிவிப்பதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (ப 11)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 154 பிரசோற்பத்தி சித்திரை 18 (01-05-1991) புதன்

# இன்று மக்கள் இணைந்து நடாத்தும் மே தின விழா!

## வீரமரணம்

நேற்று முன்தினம் ஆனைவிழுந்தான் முகாம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஆனந்தன் (ப. கமலநாதன் இளிதொரம்) வீரமரணமடைந்தார். 71

## நல்லூரில் மாபெரும் பொதுக்கூட்டம்

தொழிலாளர் தினமான மேதினம் இன்று தமிழீழமெங்கும் பெருமெடுப்பில் நடைபெறுகிறது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையில் தமிழீழத்தின் தொழிலாளர்களை ஒன்று திரண்டு நடாத்தும் மேதின பேரணி இன்று காலை ஒன்பது மணிக்கு ... சந்தியில் ஆரம்பமாகிறது. ... அணி காங்கேசன் துறை வீதி வழியாக தட்டாதெருச் சந்தியை வந்தடைந்து அங்கி ... அரசடி வீதியூடாக நல்லூர் சென்றடையும்.

நல்லூர் கோவில் முன்றலில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக் கூட்டமும் இடம் பெறவுள்ளது.

இவ் ஊர்வலத்தில் இம்முறை பல தொழிலாளர், நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நேற்று மாலையுடன் பூர்த்தியானது.

இதேவேளை ஊர்வலம் அணிவகுத்துசெல்லும்ஒழுங்கு முறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்வல ஆரம்பத்தில் தமிழீழ மாணவர் அணியும் அதனைத் தொடர்ந்து கைத்தறனாளர் அணி, ஒலிபெருக்கி வாகனம், விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் அணி, ஊர்திகள் வலிகாமம் பிரிவு, வடமராட்சி பிரிவு, தென்மராட்சி பிரிவு, தீவகபிரிவுகலைகலாசார அணி தமிழீழ ஆய்வு நிறுவனம், மகளிர் முன்னணி, மாணவர் அமைப்பு, நீதி நிர்வாகப்பிரிவு கூட்டுறவு சங்கங்கள், அனைத்து தொழிற்சங்கங்கள் சைக்கிள் ஊர்வலம் என்ற ஒழுங்கில் நடைபெறும் இவற்றின் இடையில் ஊர்திகளும் பவனி வரும். 71

## மன்னார் பகுதி அகதிகளுக்கு லொறிகளில் உணவுப்பொருள்

...ன்னாரில் உள்ள நாற்பதாயிரம் அகதிகளுக்கு நாளை ... தினம் அகதிகளுக்கான ... ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் பதினைந்து லொறி மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

... பசாலை அகதிமுகாமிலுள்ள பதினையாயிரம் அகதிகளுக்கும், மடுவிலுள்ள இருபத்தையாயிரம் அகதிகளுக்குமே இவ்வாறு உணவு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இவ் அகதி முகாமிலுள்ள நோயாளர்களுக்கு வைத்திய வசதிகள் செய்ய பிரான்ஸ் வைத்திய அதிகாரிகள் முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ப11

...லதிக அரச அதிபர் கோரிக்கை

## ...ன்று நிரந்தர அகதிமுகாம்களை குடாநாட்டில் அமைக்கவும்

...ணுவ நடவடிக்கையால் ... பெயர்ந்தோருக்காக ... மாவட்டத்தில் மூன்று ... அகதிமுகாம்களை ... மாறு யாழ் மேலதிக ... பர் அத்தியாவசிய ... ளர் நாயகத்தைக் ... ளர்.

...ளர், ஊர்காவற் ... விகாமம், ஆனைவிழுந்தான் பகுதிகளில் இருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டில் உறவினர்களின் வீடுகளிலும் பாடசாலைகள், ஆலயங்களிலும் தங்கியுள்ளதால் இம்முகாம்கள் திறக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார். (74)

## ...ல நிறுத்தத்தில் பங்குபற்றிய அரச ஊழியர்களுக்கு சலுகைகள்

...லை 1980 இல் வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றி வேலையிழந்த முப்பதாயிரம் ... ஊழியர்களுக்கு சில ... கள் வழங்கப்படவுள்ளன.

...ர்களுக்குரிய சம்பள ... நிலுவை, சம்பள உயர்வு, ...வி உயர்வு ஆகியவற்றை வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

1980இல் வேலையிழந்து மீண்டும் 1984இல் வேலை வழங்கப்பட்டவர்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும் என தெரியவருகிறது.

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு இருவர் வெட்டிக்கொலை

கடந்த வெள்ளின்று மட்டக்களப்பு மண்டூர் முகாமில் இருந்து வந்த படையினர் ஆனைகட்டியவெளி, காக்காச்சிவெட்டை, நெடியவெட்டை ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்தனர்.

சுற்றிவளைப்பில் நான்கு பொதுமக்களைக் கைது செய்து முகாம் கொண்டு சென்றனர். பின்னர் இருவரது சடலங்கள் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மண்டூர் பாலத்தில் கிடந்தன.

இதேவேளை கடந்த ஞாயிறு சித்தாண்டி முகாம் இராணுவத்தினர் பாடசாலை

— 4 ஆம் பக்கம் பார்க்க

வடகிழக்கு போரினால்

## கொழும்பு ஆஸ்பத்திரியில் இரத்தத்துக்கு தட்டுப்பாடு

கொழும்பு பெரியாஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தத்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ள முடியாதிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

வடகிழக்கு அதிகரித்துவரும் தாக்குதல் சம்பவங்களால் படையினருக்கு அதிக இரத்தம் தேவைப்படுவதால் இங்கிருந்தே இரத்தம் அனுராதபுரம், பொலன்நறுவ ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்படுகிறதாம்.

இதேவேளை கடந்த புதுவருடத்தன்று இரத்த தானத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் எவரும் இரத்தம் வழங்க முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் 5 மேதினக் கூட்டம் ஒன்பது ஊர்வலங்கள்

இன்று கொழும்பில் ஐந்து மே தினக் கூட்டங்களும் ஒன்பது மே தின ஊர்வலங்களும் நடைபெறுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சி தவிர்ந்த ஏனைய முக்கிய ஐந்து கட்சிகள் மேதினக் கூட்டங்களை நடாத்துகின்றன.

ஐ. தே. க. வின் மேதினப் பொதுக்கூட்டம் காலிமுகத்திடலிலும், சுதந்திரக்கட்சியின் பொதுக்கூட்டம் தெஹிவளை காம்பெல் பிளேஸிலும், நடாத்தப்படவுள்ளன.

## மொசாட் விசாரணை மீண்டும் நாளை ஆரம்பம்

மொசாட் விசாரணை ஆணைக்குழு மீண்டும்நாளை நடைபெறவுள்ளது.

கடைசியாக இடம் பெற்ற விசாரணையில் முன்னாள் பொலிஸ்மா அதிபர்கள் ருத்திரா ராஜசிங்கம், எச். வீரசிங்க ஆகியோர் சாட்சியமளித்தனர்.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரத்து ஒழுங்கு

இன்று நடைபெறும் மேதினக் கொண்டாட்டங்களின் ஊர்வலங்களின் போது வாகனச் சொந்தக்காரர்கள் தமது வாகனங்களை ஊர்வலங்கள் நடைபெறும் வீதிகளிலோ

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வெடிவிபத்தில் 12 போராளிகள் வீரமரணம்

நேற்றுக்காலை 6-30 மணியளவில் யாழ் நகரை அண்டிய பகுதியில் நடைபெற்ற வெடிவிபத்தில் 12 போராளிகள் மரணமானார்கள்.

அப்பா (குமாரசிங்கம் சந்திரலிங்கம், மயிலிட்டி). தேவதாஸ் லோரன்ஸ் (யாழ்), பாலகிருஷ்ணன் ஸ்ரீதர் (யாழ்) சுப்பிரமணியம் மதியழகன் (யாழ்). திருநாவுக்கரசு பவீந்திரன் (உரும்பிராய்) கார்த்திகேசு குமார் (நல்லூர்). பெரியசாமி நாகேஷ் (அரியாலை), செல்வம் காமினி (கொழும்புத்துறை)) செல்லையாவின் ஆனந்தராஜா (குருநகர்) தருமன் கிரீபன் (குருநகர்), சிவப்பிரகாசம் ஸ்ரீகாந் (திருநெல்வேலி), ஆறுமுகம் சிவநேசன் (கொக்குவில்) இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

இவ் வெடிவிபத்தில் 4 வீடுகள் சேதமடைந்தன 12 பொது மக்கள் காயமடைந்தனர், (ப-11, 71)

## காணாமல் போனோர் விவரம் செஞ்சிலுவைச் சங்கம் சேகரிப்பு

காரைநகர், ஊர்காவற்றுறை தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளால் காணாமல் போனவர்களின் விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சேகரித்து வருகிறது.

காணாமல் போனவர்களின் விபரங்களை அவர்களது உற

— 4 ஆம் பக்கம் பார்க்க

நேற்றைய தொடர்

# மே-I சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்ட நாள்

மே - 1...

அத்தொழிற்சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த K. C. நித்தியானந்தா, தொழிற்சங்கப் போராட்டத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகித் தன் உயிரைத் தியாகம் செய்த தியாகி கந்தசாமி போன்ற தமிழர்களின் சேவைகளைக் கணக்கிலெடுக்காது. தொழிற்சங்கப் பணிகள் அனைத்தையும் சிங்களத்தில் நடத்தி தமிழ் மொழியைப் புறக்கணித்ததுடன் தமிழ் ஊழியர்களுக்கு எதிராகச் செயற்படவும் ஆரம்பித்தது அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் (GCSU).

தியாகி கந்தசாமியின் உயிர்த்தியாகத்தை வைத்து தொழிற்சங்கத்தை வளர்த்த அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் (GCSU) மட்டுமன்றி இடதுசாரிகளின் ஏனையதொழிற் சங்கங்கள் கூட தியாகி கந்தசாமிக்கு கொழும்பில் வைக்கப்பட்டிருந்த சிலையை சிங்கள இனவெறியர்கள் உடைத்து சிதைத்த சம்பவத்தைக்கூடக் கண்டிக்காது சிங்கள இன நலனை மட்டுமே பேணும் தொழிற்சங்கங்களாகமாறிவிட்டன

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" "தொழிலாளர் வர்க்கமே ஒன்றுபடு" என முழங்கியபடி மேதின அணிவகுப்புகளையும், ஊர்வலங்களையும் நடத்திவந்த இடதுசாரிகள் 1965க்குப் பின் தோசை, மசாலவடை, தலத்தெல், (நல்லெண்ணெய்) அப்பிட்ட எப்பா (எங்களுக்கு வேண்டாம்)' என்று தமிழ்மக்களைப் புறக்கணித்து தமிழ்மக்களுக்கு எதிராக இனவெறிக்கூச்சலை எழுப்பினர். தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரேகாரணத்துக்காக பல இலட்சம் மலையகத் தோட்டத்தொழிலாளர்களையும் கைவிட்டு அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டனர். பாராளுமன்றத்தின் மூலம் குறுக்குவழியில் பதவிகளைப் பெறுவதற்காக தொழிலாளர் வர்க்க நலன்களைப் புறக்கணித்த இடதுசாரிகள் தடம்புரண்டனர்.

சிங்களத் தொழிலாளர்களோடு இணைந்து செயற்பட முடியாத நிலையில், தமிழ்த் தொழிலாளர் தமது உரிமைகளை நிலைநாட்ட அமைத்துக்கொண்ட மொழிவழித் தொழிற்சங்கங்களையும் அழித்தொழிக்க சிங்கள ஆட்சியாளரும் ஏனைய சிங்கள தொழிற்சங்கவாதிகளும் திட்டமிட்ட முறையில் செயலிலிறங்கினர் தமிழ்ப்பகுதியில் சிறப்புறச் செயலாற்றி வேகமாக வளர்ந்துவந்த மொழிவழித் தொழிற்சங்கங்களிலொன்றான இலங்கை பல்தொழிலாளர் கழகத்தை அழித்தொழிப்பதற்காக குறைந்தது 5000 தொழிலாளர்களுக்குக் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் இடையாது என்று சட்டத்தைக் கொண்டு வந்து அத்தொழிற்சங்கத்துக்கு மூடுவிழா நடத்தினர் சிங்கள ஆட்சியாளர். அதற்கு சிங்கள தொழிற்சங்கத் தலைவர்கள் துணைபோயினர்.

ஆரம்பகாலத்திலிருந்து தொழிற் சங்கப்பணியாற்றிய தமிழர்கள் அவமதிக்கப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு தமிழர்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்குக் கூட தடைகள் போடப்பட்டு மலையகத்தமிழர்களின்குடியுரிமை வாக்குரிமைகளும் பறிக்கப்பட்டு இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிரான இனவெறி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. வர்க்க முரண்பாடுகளுக்கு மேலாகஇனமுரண்பாடுகள் தலையெடுத்துள்ளன.

தமிழ் மக்கள் வர்க்க உணர்வோடு செயற்பட்டு தொழிலாளர் வர்க்கத்துக்காக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த போதிலும் தியாகங்களைப் புரிந்த போதிலும் முற்றியுள்ள இன முரண்பாடுகளினால் தொழிலாளர் வர்க்கம் எண்ணிப் பார்க்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

தவிர, தற்போதைய சூழ்நிலையில் தமிழீழப்பகுதி தொழிலாளர்களின் போராட்ட இலக்கும் வேறுபட்டதாக ஆகிவிட்டது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு, சலுகைகள், வசதிகள் கேட்டுப் போராடும் நிலை அன்றி, தாம்செய்து வந்த தொழிலையே இழந்து விட்ட நிலையில்தொழிலுக்காக அலையுறும் நிலை ஏற்பட்டு விட்டது.

கட்டிடத் தொழிலுக்கு வேண்டிய சிமெந்து, இரும்புக் கம்பி, மணல் போன்ற மூலப்பொருட்களின்மையால் கட்டிடத் தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

ஆலைகளுக்கு வேண்டிய எரிபொருள்கள், மின்சாரம் மற்றும் மூலப்பொருள்களின்மையால் ஆலைத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

விவசாயத்துக்கு வேண்டிய விதைப்பொருள், உரம், கிருமிநாசினி, எரிபொருள்களின்மையால் விவசாயத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

மீன்பிடிக்கச் செல்ல எரிபொருளின்மையாலும், இராணுவத்தாக்குதலினின்றும் பாதுகாப்பின்மையாலும் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முடியாமல் கடற்றொழிலாளர்கள் அவதியுறுகிறார்கள்.

சிங்கள அரசின் பணமுடக்கத்தினால் தமிழீழப்பகுதியில் பணப் புழக்கம் இல்லாத சூழ்நிலையில், கடற்றொழிலாளர்கள் வேலையின்றி அவதியுறுகிறார்கள்.

இவ்வாறு தமிழீழத்திலுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் தமது தொழிலை இழந்து இன்று பட்டினிச்சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கைத் தீவில் வர்க்க முரண்பாடுகளைவிட இனமுரண்பாடுகள் முற்றிவிட்டன சிங்களப்பாட்டாளிகளைவிட தமிழீழத்தில் முதலாளிகள், பணக்காரர்கள் கூட இன்று பெரும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி வருகிறார்கள். தொழிலே இல்லாது தமிழீழத் தொழிலாளர்கள் அவதியுறுகின்றனர். இன்று இங்குமலைபோல வளர்ந்துள்ள சிக்கல் தேசிய இனச்சிக்கலே. தமிழீழமக்கள் தேசிய விடுதலையை நிலைநாட்டுவதன் மூலமே தம்மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்து அடக்குமுறைகளை உடைத்தெறிந்து உரிமை பெற்ற இனமாக பெருமையுடன் வாழமுடியும்.

எனவே தமிழீழ மக்களின் இவ்வாண்டு மே நாள் முழக்கமும் சூளுரையும தமிழீழ விடுதலை நோக்கியதாகவே அமையவேண்டும் மே நாள் கொண்டாட்டங்கள் அனைத்தும் மக்களின் சுதந்திரத்துக்காகவும் முதலாளித்துவ அடிமைத் தளையிலிருந்தும் விடுவிப்பதற்காகவும்அமையட்டும்.

"உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கட்டும்"

# உணவு விநியோகத்தைப் படைகள் தடுக்கின்றன

## தொண்டர் ஸ்தாபனங்கள் வெளிநாடுகளுக்கு முறையீடு

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அகதிகளுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதில் தாம் பல பிரச்சினைகளை எதிர் நோக்குவதாகப் பல தொண்டர் ஸ்தாபனங்கள் முறையிட்டுள்ளன.

இந் நிலை குறித்து மேற்படி ஸ்தாபனங்கள் தமக்கு நிதியுதவி வழங்கும் வெளிநாடுகளுக்கு அறிவித்துள்ளன.

வடக்கிலுள்ள அகதிகளுக்கு அரசாங்கக் கப்பலில் கொண்டு செல்லும் உணவுப் பொருள்கள் போதுமானதாக இல்லாத காரணத்தால் தனியார் தொண்டர் ஸ்தாபனங்களின் சேவை கோரப்பட்டுள்ளது. ஆனால் உரிய அனுமதிப் பத்திரங்களுடன் லொறிகளில் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்கள் கூட பாதுகாப்புப் படையினரால் பல நாட்கள் தடுத்து வைக்கப்படுவதாகவும் இதனால் மருந்துகளும், ஏனைய இல உணவுப் பொருள்களும் தரம் கெட்டு விடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இடம்பெயரும் தீவக மக்களுக்கு - உடன் உதவி வழங்கி உதவுமாறு கோரிக்கை

தீவக மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து யாழ்நகருக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். சகல உடமைகளையும் கைவிட்டு அநாதரவாக வந்துள்ள இவர்களுக்கு உதவி புரியுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது

கடந்த இரண்டு தினங்களாக உங்கள் ஆதரவுடன் பல்லாயிரக் கணக்கான மக்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம். இவர்களின் உடனடித் தேவையாக அமைவது முதலிரண்டு நாட்களும், சமைத்த உணவாகும் தொடர்ந்து உடுதுணிகள், உணவு வகைகள், சமையற் பாத்திரங்கள் ஆகியன தேவைப்படுகின்றன. எனவே தேவையின்முக்கியத்துவத்தை உணர்ந்து பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்க வேண்டுமெனவும் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான சகல தொடர்புகளையும் இல83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமைக் காரியாலயத்துடனோ அல்லது கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் நமசிவாய வித்தியாலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைக் காரியாலயத்துடனோ ஏற்படுத்திக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று வெளியீட்டு விழா

'இருளைக்கிழித்து தெருவில் இறங்கு' கவிதை தொகுப்பு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் நான்கு மணிக்கு சாவகச்சேரி—நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள வெளியீட்டு விழாவில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை, நகரசபை ஆணையாளர் த. நவரத்தினராசா உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மாவீரன் டயஸ் நினைவுப் போட்டி

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் நடாத்தும் மாவீரன் மேஜர் டயஸ் கந்தசாமியின் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற ஆட்டங்களில், மேலும் றொபேட் விக்டயூனியன் வி.க. புளுபேட்ஸ் வி.க, வளர்மதி விளையாட்டுக் கழகம், ஈச்சமோட்டை ச.ச.நி. ஏ பிரிவு ஜூபிட்டர் வி.க. வர்த்தக வங்கி அணி, நோதேண் வி.க பச்சை ஆகிய அணிகள் 2ஆம் சுற்றில் ஆடவும் யுத்காமல் வி.க சென்ரலைற் வி.க. அணிகள் 3 ஆம் சுற்றில் ஆடவும், லைக்ஸ் வி.க. அணி கால் இறுதி ஆட்டத்தில் ஆடவும் தகுதி பெற்றுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதியில் 11 5 91ல் நடைபெறவுள்ள ஆண்கள் 4மைல் மருதன் ஓட்டப்போட்டி, பெண்கள் 4 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, வலது குறைந்தவர்களுக்கான மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப் போட்டி, விநோத உடைப் போட்டி ஆகிய போட்டிகளில் யாழ் மாவட்டத்தில் உள்ள எவரும் பங்குபற்றலாம் என்றும் பங்குபற்ற விரும்புவோர் நிலையச் செயலாளர் சசி தவச்செல்வத்துடன் தொடர்பு கொள்ளும் படியும் கோரப்படுகின்றனர்.

(16)

## பரந்தனில் உப்பளக்கூட்டம்

வடபிராந்திய-உப்புக் கூட்டுத்தாபனத்தின் நலன்புரிச் சங்கம், மரணாதார பரஸ்பர ஒத்துழைப்புச் சங்கம், குறிஞ்சாத்தீவு, கண்ணகை அம்பாள் தேவஸ்தானம் ஆகியவற்றின் சகல நிர்வாக உறுப்பினர்களையும், 8ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு, பரந்தன் முரசுமோட்டை மக்கள் வங்கிக் கட்டிடத்தில் வடபிராந்திய முகாமையாளர் செ. வேலாயுதம்பிள்ளையைச் சந்திக்குமாறு உதவி உற்பத்தி முகாமையாளர் மா. ஜே த. மனோகரன் கோரியுள்ளார்.

இங்கு மேற்படி சங்கங்களின் கடந்தகால, தற்போதைய நிதிநிலைமை, கொடுப்பனவுகள் சம்பந்தமாக ஆராயப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லையில் வறட்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது.

விவசாயத்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டு உள்ளது.

குறிப்பாக சேனைச் செய்கையும் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் காய் கறித்தோட்டங்களும் காய்ந்து நாசமடைந்து வருகின்றன. (38)

## குறைவானோரே தோற்றினர்

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற் தேர்வு முதலாம் வருட மாணவர்களுக்காக அண்மையில் கொழும்பு, கண்டி மாவட்டங்களில் பரீட்சைகள் நடாத்தப்பட்டன,

இப்பரீட்சையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த 25வீதத்துக்கும் குறைவான மாணவர்களே தோற்றியிருந்தனர்.

# வேலையிழந்த ஒருமாதத்துக்குள் குற்றப்பத்திரிகை

## இணைந்தசேவைகள் சட்டத்தில் திருத்தம் வருகிறது

பொது நிர்வாக இணைந்த சேவைகள் சட்டம் விரைவில் திருத்தியமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தற்பொழுதுள்ள இணைந்த சேவைகள் சட்டம் பொதுமக்களுக்குச் சேவை செய்வதைவிடத் தடைகளையே அதிகம் விதிக்கின்றது எனப் பரவலாகத் தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்தே இந்நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரச ஊழியர் ஒருவர் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்பே அவர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவுள்ளது.

இனிமேல் ஒரு ஊழியர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்க வேண்டும். மூன்று மாதத்துக்குள் விசாரணைகள் முடிவடைய வேண்டும்.

## அலங்கார வண்டிகளில் மாவீரர்

இன்று நடைபெறவிருக்கும் மேதின ஊர்வலத்தில் நவாலி வடக்கு சனசமூக நிலையம் அலங்கார மாட்டுவண்டில்களில் போராளிகளின் உருவப் படங்களை ஊர்வலமாக எடுத்துவரவுள்ளது.

இதேவேளை வலிகாமம் பகுதிகளில் ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் மக்களின் தாகத்தைத் தீர்க்க "தாகசாந்தி" நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. (ப-11,74)

## முல். அரசஅதிபராக தருமகுலசிங்கம்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக கே. தருமகுலசிங்கம் மே மாதம் முதல் நியமனம் பெறவுள்ளார். நியமனக் கடிதமும் முல்லைத்தீவு செயலகம் வந்துள்ளது.

யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் கொழும்பில் பதவி ஏற்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(88)

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய்ச் செடியைத் தாக்கும் குருமன் நோய்க்கு நீமியசவுடன் சலவைப் பவுடர் கலந்து தெளிக்கவும் கைமேற் பலன். ஏனைய பயிர்களுக்கும் ஏற்றது பாவனை முறைக்குத் தொடர்பு கொள்க. மில்க்வைற் யாழ்ப்பாணம். 05001

# பாதுகாப்பு அமைச்சரையே பாதுகாக்க முடியாத அரசு

## உலகிலேயே இலங்கையில்தான் என்கிறார் அனுரா

"இந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சருக்கே பாதுகாப்பு வழங்க முடியாத இவ் அரசாங்கம் எவ்வாறு பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப் போகின்றது? உலகிலேயே இது போன்ற ஒரு சம்பவம் இலங்கையில்தான் நடைபெற்றுள்ளது."

இவ்வாறு கம்பளையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் சுதந்திரக்கட்சி எம்.பி யான அனுரா பண்டாரநாயக்கா கூறினார். (23)

## வளைகுடாவிலிருந்து திரும்பியோருக்கு மீண்டும் அங்கு வேலை வாய்ப்பு

வளைகுடா யுத்தம் காரணமாக நாடு திரும்பியவர்களுக்கு மீண்டும் பழைய இடங்களில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு அமைச்சர் குழு ஒன்று விரைவில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லவுள்ளது.

தொழில் அமைச்சரின் பேச்சாளர் ஒருவர் இத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன் வளைகுடா யுத்தத்தினால் நாடு திரும்பியோர் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென 21 அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை அரசு நியமித்துள்ளது. இவர்கள் ஆறு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 102 வயதுப்பாட்டி விலகிக் கொண்டார்

தமிழக சட்ட சபைக்குக் கோவில்பட்டி தொகுதியிலிருந்து போட்டியிட வேட்பு மனுவைத் தாக்கல் செய்து சாதனையையும், பரபரப்பையும் ஏற்படுத்திய 102 வயது மூதாட்டி நேற்று முன்தினம் தனது மனுவை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

## உதவி அரச அதிபராக கனகரத்தினம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக எஸ். கனகரத்தினம் இம் மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (13)

## திருமலையில் திடீர் சூறாவளி! 24 மீன்பிடிப்படகுகள் சேதம்

திருகோணமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடும்புயல் வீசியதாக அறிவிக்கப் படுகின்றது.

இந்தப் புயல் காரணமாக திருமலை கோணேசர் கோட்டைச் சூழலிலும், மடத்தடி கடற்பகுதியிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 24 மீன்பிடி வள்ளங்கள் சேதமுற்றன.

## இந்தியாவில் ஆட்சிக்கு வரும் புதிய அரசு நிதி நெருக்கடியை எதிர்நோக்குகிறது

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு பதவியேற்கவுள்ள புதிய அரசு நாட்டின் வளர்ச்சிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரிடும்.

மேற்கண்டவாறு உலக வங்கி எச்சரித்துள்ளது.

## குவைத்தில் தொடர்ந்து பணிபுரிந்த இலங்கையருக்கு விசேடபடி!

வளைகுடா யுத்தத்தின் போது குவைத்தை விட்டு வெளியேறாமல் அங்கேயே தங்கியிருந்த இலங்கையருக்கு இப்போது யோகம் அடித்திருக்கிறது.

உயிர் போனாலும் பரவாயில்லை, குவைத்தை விட்டு வெளியேற மாட்டோம் என்ற உறுதியுடன் இருந்தவர்களுக்கு அவர்களை வேலைக்கு அமர்த்தியிருப்பவர்கள் பெருந்தொகையான ஊக்கப் பணத்தை அளித்து வருகிறார்கள்.

வைத்திய சாலைகளிலும், இதர அத்தியாவசிய சேவைகளிலும் ஈடுபட்டிருந்த இலங்கையர்களும் இதனால் பயன் பெற்று வருவதாகவும் வெளிநாட்டமைச்சுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. 23

## மட்டுநகர் டச்சுக் கோட்டை கவனிப்பாரின்றி அழிவுறும் நிலை

மட்டக்களப்பில் புராதன சின்னமாக விளங்கும் டச்சுக் கோட்டை அழிவுறும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இக்கோட்டையினுள்ளேயே மட்டு. செயலகம் அமைந்துள்ளது.

தற்போதைய நிலையில் இக் கட்டிடம் பெரும் பாரிய மரங்களும் அதனைச் சுற்றி அடர்ந்த, படர்ந்த பெரும் கொடிகளையும் தாங்கி நிற்பதுடன் பல இடங்களில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

## நீந்தி விளையாடியவர் நீரில்மூழ்கி மரணம்

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் கேணியில் நீந்தி விளையாடிய சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் நேற்று முன் தினம் நிகழ்ந்துள்ளது.

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் சங்கரதாஸ் (9) என்ற பள்ளிச் சிறுவனே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

## பூநகரியில் தபால் விநியோகம்

வவுனியாவில் தேங்கிக் கிடந்த அஞ்சல் பைகளில் பூநகரி தபாலகத்திற்கான 45 அஞ்சல் பைகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பூநகரி அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தபாலக ஊழியர்கள் இத் தபால்கள் முழுவதையும் துரிதமாக விநியோகித்து முடித்த தன்மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-35)

## புதிய ஆசிரிய இடமாற்றத்திட்டம் இன்றுமுதல் நடைமுறைக்கு வருகிறது

இம்மாதம் முதல் புதிய ஆசிரிய இடமாற்றத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி ஒரு பாடசாலையில் கடமை புரிந்த ஆசிரியர் வேறு பாடசாலைக்கு இடமாற்றப்படும் பொழுது அதே பதவியிலேயே நியமிக்கப்படுவார்.

## இ. தொ. கா. மேதின விழாவில் ரி. எம். எஸ், பி. பி. ஸ்ரீநிவாஸ்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் நடாத்தவுள்ள மேதின விழாவில் தென்னிந்திய பிரபல பாடகர்களான டி. எம். சௌந்தரராஜன், வாணிஜெயராம், பி. பி. ஸ்ரீநிவாஸ் ஆகியோரின் இசைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவில் தென்னிந்திய நடிகரும், டிஸ்கோ டான்சருமான ஆனந்தபாபு, டிஸ்கோ சாந்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கொழும்பில் வாணி ஜெயராம்

இன்று மாலை கொழும்பில் காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின விழாவில் பிரபல தமிழக பின்னணிப் பாடகர்களான வாணிஜெயராம், ஜெயச்சந்திரன் மற்றும் நாட்டியதாரகை மயூரி சுதாச்சந்திரன் ஆகியோரின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

## பொன்விழாக் காணும் தமிழோசை மே முழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகள்

லண்டன் பி.பி.சியின் தமிழோசை தனது ஒலிபரப்புச்சேவையின் 50 வது ஆண்டில் மே மாதம் மூன்றாம் திகதி காலடியெடுத்து வைக்கின்றது.

இதனை முன்னிட்டு மே மாதம் முழுவதும் தமிழோசையில் பொன்விழாச் சிறப்புநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

உலகெங்கணுமுள்ள தமிழர்கள் தற்பொழுது லண்டன் பி. பி.சியின் தமிழோசையை வாரத்தில் ஆறு தினங்கள் கேட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## குழந்தை வியாபாரத்தில் சர்வோதயம் குற்றம் சாட்டுகிறது 'அத்த' பத்திரிகை

சர்வோதயம் வெளிநாடுகளிலிருந்து தவறான முறையில் நிதி உதவிகளைப் பெற்றுவருவதாக "அத்த" என்ற சிங்களப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர்களுக்குக் குழந்தைகளை விற்கும் சர்வதேச ஏஜென்ஸி பெறும் இலாபத்தில் ஒருபங்கை சர்வோதயம் பெற்றுவருவதாகவும் "அத்த" தெரிவித்திருக்கிறது.

'பினாஷ்' என்ற டச் கம்பனி ஒன்று மூன்றாம் உலக நாடுகளில் இருந்து குழந்தைகளை வாங்கி மேற்கு நாடுகளுக்கு விற்பதாகவும் இப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## ஒன்பதாம் வருட மாணவர்களுக்கு டிசம்பரில் தொழில்நுட்பப் பரீட்சை!

ஒன்பதாம் வருட மாணவர்களுக்கு முதல் தடவையாக இவ் வருடம் டிசம்பர் மாதம் கனிஷ்ட தொழில் நுட்பப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் போது ஏற்கப்படவுள்ளது.

எழுத்து, செய்முறை என இரு பிரிவுகளாகப் பரீட்சை இடம்பெறும். எழுத்துப் பரீட்சைக்கு 30 புள்ளிகள் வழங்கப்படும்.

## பங்களாதேஷில் கடும் சூறாவளி பல தீவுகள் முற்றாக அழிந்தன

பங்களாதேஷின் கரையோரப் பகுதிகளில் நேற்றுக் காலை ஏற்பட்ட பயங்கர சூறாவளியால் பல அனர்த்தங்கள் உண்டாகியுள்ளன.

இதனால் வங்காளவிரிகுடாவில் உள்ள பல தீவுகள் அழிந்து போயின.

தொடர்புகள் சீரற்றுப் போனதால் சேதவிவரங்களை முழுமையாகப் பெற முடியவில்லை என ஏஜென்ஸிச் செய்திகள் கூறின.

மணித்தியாலத்திற்கு 140 மைல் வேகத்தில் சூறாவளி வீசியதாகவும் இந்நாட்டின் 20 வருடகால சரித்திரத்தில் இத்தகைய சூறாவளி வீசியது இதுவே முதல் தடவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ந்து புயல் வீசலாம் என அஞ்சப்படுவதாகவும் மேலும் தகவல்கள் கூறின.

## தமிழ் மக்களோ அங்கு இல்லை 'தெம்பிலி'யோ மாயமாக மறைகிறது

மன்னார்த் தீவில் நகரப் பகுதியை அண்டியுள்ள இல பகுதிகளில் இளநீர் மற்றும் பொருள்கள் களவாடப்பட்டு வருகின்றன.

இப்பகுதி வெறிச்சோடிய பகுதியாகக் காணப்படுகிறது. செடி, கொடிகள் வளர்ந்து இப்பகுதி பயங்கரமாகக் காட்சி அளிக்கிறது.

ஆனால் சிங்களவர்கள் விரும்பி அருந்தும் "தெம்பிலி" என சிங்களத்தில் குறிப்பிடப்படும் இளநீர்த் திருட்டுஇங்கு தொடர்கிறது.

இப்பகுதியில் சிறுடையினரின் நடமாட்டமும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 17

## ஆனையிறவு, மன்னார் தீவக அகதிகள் பூநகரி கிராமப்பகுதிகளில் தஞ்சம்

தீவுப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த மக்கள் பூநகரி பள்ளிக்குடா, வினாசியோடை, கௌதாரிமுனையிலும், ஆனையிறவிலும் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாகப் பரந்தன்-தட்டுவன் கொட்டியைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் பூநகரி - நல்லூர் ஆலங்கேணிப் பகுதிகளிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். மொத்தமாகப் பூநகரியில் 500 ற்கு மேற்பட்ட அகதிகள் தற்சமயம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மன்னாரில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த 21 குடும்பங்கள் பூநகரியில் உள்ள முழங்காவில், நாச்சிக்குடா பகுதிகளிலும் தங்கியுள்ளன. (ப35)

## மரங்களை முறித்துபயிர்களை நாசம்செய்து அலியன் யானை அட்டகாசம்

பல்லவராயன்கட்டு, முழங்காவில் போன்ற பகுதிகளில் அலியன் யானை ஒன்றின் தொல்லை சில காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் பொது மக்கள் குடியிருப்புப் பகுதிக்கு வரும் இந்தயானை அங்குள்ள தென்னை, வாழை மரங்களை முறித்து எறிவதுடன் சிறு பயிர்களையும் நாசம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## லங்காசிமெந்துத்துறைமுக ஊழியர் சம்பளத்தை இடைநிறுத்தஉத்தரவு

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன துறைமுக ஊழியர்கள் அனைவரினதும் சம்பளத்தை உடனடியாக நிறுத்துமாறு கொழும்பு தலைமையகம்தேற்றும் பணித்துள்ளது.

தற்பொழுது லங்கா சிமெந்து நிறுவன துறைமுகத்தில் 35 ஊழியர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக ஆராய வெள 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் முக்கியகூட்டமொன்று நடாத்தப்படவுள்ளதாக லங்கா சிமெந்துத்துறைமுக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (34)

★ தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீமாவோ

# தமிழர்களின் ஆதரவு ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இல்லை

"1982 ஜனாதிபதித்தேர்தலில் ஜே ஆருக்கும் 1988 ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசாவுக்கும் யாழ்ப்பாணத்தில் கிடைத்த வாக்குகள் எத்தனை என்பது உங்களுக்குத் தெரியும்,"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கிரிலப்பனையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தமிழ் மக்களின் ஆதரவு நம்பிக்கை ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஒருபோதும் இல்லை இனப்பிரச்சினையை ஐக்கிய தேசியக்கட்சி அரசினால் ஒருபோதும் தீர்க்கமுடியாது

நான் பதவியில் இருந்த பொழுது வடபகுதியில் மக்கள் விவசாயத்துறையில் முன்னேற்றம் அடைந்தனர். தவறு செய்தவர்கள் விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர் ஆனால் இன்று விசாரணை ஏதுமின்றி திடீரென கைது செய்யப்படுகிறார்கள் அவர்கள் காணாமல் போகின்றனர்.

சமாதானம் பேச்சுவார்த்தை என்று அரசு கூறிவருகிறது. ஆனால் நாட்டில் நடப்பது என்ன என்பது உங்களுக்கே தெரியும்.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை நான் சிறையில் அடைத்தேன் ஆனால் அவர்களை விடுதலை செய்தது யூ. என். பி. அரசே என்றார். (33)

## அல்லைப்பிட்டி தபாலகம்

அல்லைப்பிட்டி உபதபாலகம் நாளை 2 ஆம் திகதி முதல் யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்குவதால் அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் தபால்களை இங்கு வந்து பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசுக்கு பிரச்சினை உள்ளது

உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் தற்போதைய அரசு பல சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றது என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹரகம இளைஞர் பேரவையில் உரையாற்றிய ஜனாதிபதி இளைஞர்கள் ஒன்று தீவிரவாத வழிக்குச் சென்றனர் என தாம் ஆராய்வதாகவும் குறிப்பிட்டார்.

## தீவக மக்களுக்கு முக்கிய இடம்

இலவாலை, காரைநகர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், தீவுப் பகுதி மக்களுக்கே வழங்கப்படும் என யாழ் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளதாக கோட்டை இராமசேனையானர் திரு தில்லை நடராஜா அறிவித்துள்ளார்.

## தற்போது வீசும் காற்றினால் பல வாழை மரங்கள் சேதம்

யாழ் குடாநாட்டில் தற்போது வாழைக்குலைகளின் விலைவீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது வேகமாக வீசும் காற்றினைத் தொடர்ந்து வாழைகள் குலைகளுடன் முறிந்து விழுந்துள்ளதனால் அதிகளவில் வாழைக்குலைகள் சந்தைக்கு வந்துள்ளதை வியாபாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு உள்ள இந்நேரத்தில் அதிக விலைக்கு மண்ணெண்ணெய் வாங்கி வாழைச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் இந்தக் காற்றினால் பெருமளவு நட்டமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறுவன் காயம்

துப்பாக்கிச் சன்னத்தை எடுத்த சிறுவனொருவன் அதனை எரிந்து கொண்டிருக்கும் நெருப்பினுள்போட்ட போது வெடித்ததால் படுகாயமடைந்த சம்பவம் நீராவியடி இரண்டாம் ஒழுங்கையில் இடம்பெற்றது.

சந்தையா கஜேந்திரன் (12) என்ற இச்சிறுவன் காயமடைந்துள்ளார். (ப 11)

## சுதந்திரக்கட்சி தலைமைப் பதவி ஸ்ரீமாவோ துறகக விருப்பமாம்

எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உடல் நலமின்மையால் சுதந்திரக்கட்சி தலைமைத்துவத்தை துறந்துவிட விரும்புகிறார் என கைத்தொழில் அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் கூறினார்.

அவரால் இக்கட்சியின் கொள்கைத்திட்ட மொன்றை வகுக்க முடியாது உள்ளதாகவும் புதிய தலைவரை தெரிவு செய்த பின்னர்தான் சுதந்திரக் கட்சியினரால் எதனையும் செய்ய முடியும் எனவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

## ஊரடங்கு நீக்கம்

யாழ் குடாவில் கடந்த வியாழக்கிழமை முதல் அமுலில் இருந்த ஊரடங்கு சட்டம் நேற்றுக்காலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுவேலியில் வாழைப்பழம் கிலோ 2 ரூபா

அச்சுவேலிச் சந்தையில் வாழைப்பழம் கிலோ இரண்டு ரூபாவாக விற்பனையாகின்றது.

அதிகளவு வாழைக் குலைகள் விற்பனைக்குச் சந்தைக்கு வந்துள்ளதால் கதலி இன வாழைப்பழம் கிலோ இரண்டு ரூபாவாகவும் கப்பல் இனம் கிலோ நான்கு ரூபாவாகவும் விற்பனையாகின்றன. (32)

## காமினி திஸநாயக்கா மீது உயர் நீதிமன்றத்தில் வழக்கு

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா பேராசிரியர் புல்தூன்ஸ கடத்திய சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தார் என விசாரணை மேற்கொண்ட பொலிஸார் அவரது வாக்குமூலத்தைப்பதிவு செய்த பின்னர் இக்குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இருப்பதாகக் கருதி அவ்வாக்குமூலத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்த வாக்கு மூலம் சட்டமா அதிபரின் பரிசீலனையில் உள்ளது.

திஸநாயக்கா மீதான குற்றப்பத்திரம் அடுத்த வாரம் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் இதேசமயம் ஏனைய சந்தேக நபர்களுக்கும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும். (48)

---

**காணாமல்...**

வினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களைத் தேடித் தருமாறு கோரி சர்வதேச செஞ்சிலுவை அலுவலகத்தில் மக்கள் தினமும் வருகின்றனர். 74

**மொசாட்...**

1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் பணிபுரிந்த படை அதிகாரிகள் தொடர்ந்தும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.

**போக்குவரத்து...**

அல்லது வீதிகளின் குறுக்காகவோ தேவையற்ற விதத்தில் போக்குவரத்துக்கள் மேற்கொள்ள வேண்டாம் எனத் தமிழீழக் காவல்துறையினர் வாகனச் சொந்தக்காரர்களை வேட்டுக்கொள்கிறார்கள். (39)

**மட்டக்களப்பில்...**

யில் படிப்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ந. சிவராசா (32) என்பவரைக் கைது செய்தனர்.

கொக்கட்டிச்சோலையில் இருந்து நேற்று முன்தினம் பண்டூனை தீவுக்கு ரோந்து சென்ற படையினர் மீது மகிழடித்தீவில் வைத்து விடுதலைப் புலிகள் இளைமர் தாக்குதலை மேற்கொண்டனர்.71

---

## ஈராக்குடன் இரகசிய வர்த்தக உறவு

## ஐ. நா. தடையை மீறிய இலங்கைக் கம்பனிகள்

ஈராக்கிற்கு எதிரான ஐ நா. சபைகள் விதித்த பொருளாதாரத் தடை அமுலிலிருந்த காலத்தில் கொழும்பிலிருந்த ஈராக்கிய நிறுவனம் ஒன்று இலங்கைக் கம்பனிகளுடன் இரகசிய வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இந்த வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கைக் கம்பனிகளை இலங்கை பற்றி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஐ. நாவின் தடையை மீறி ஈராக்குடன் வர்த்தக நடவடிக்கையில் 52 வர்த்தக நிறுவனங்களும் 37 தனிநபர்களும் ஈடுபட்டதாக அமெரிக்கா கண்டு பிடித்துள்ளது. இதில் 32 பிரிட்டனில் உள்ளவை.

## சுங்க விடயத்தில் தலையீடு பாராளுமன்றத்தில் தகவல்

சுங்கப்பரிசோதனையில் பிடிபட்ட பொருள்கள் விவகாரத்தில் ஜனாதிபதி தலையிட்டாரா என்ற கேள்வி பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

இது தொடர்பான தொலைபேசியில் பேசியவை ஒலிப்பதிவு செய்த நாடா தம்மிடம் இருப்பதாக நவசமசமாஜக்கட்சி எம். பி. யான வாசுதேவ நாணயக்கார கூறினார்.

அப்போது இது பொய் என்றும் அப்படியான சம்பவம் இடம்பெற வில்லை எனவும் அரச தரப்பில் கூறப்பட்டது.

## தபால் பொதிகள் எடுத்துவர நடவடிக்கை

ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதையடுத்து கப்பலில் வந்து பருத்தித்துறையில் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளை யாழ்ப்பாணம் எடுத்து வர தபால் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (29, 33)

## பிறப்பு, இறப்பு பத்திரங்களை மே மாதம் முதல் வழங்க ஏற்பாடு

யாழ் செயலகத்தில் தேங்கிக் கிடக்கும் ஒப்பதினாயிரத்துக்கும் அதிகமான பிறப்பு, இறப்பு பத்திரங்களுக்குரிய விண்ணப்பங்களை துரிதமாக வழங்க யாழ் மேலதிக அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலதிகப் பதிவாளர் அலுவலகத்தில் போதிய ஊழியர்கள் இல்லாமையால் இவ் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இம்மாதம் முதல் வாரத்திலிருந்து இப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. முக்கிய தேவைகளுக்கு மட்டுமே இவை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது; (33.47

## போலி அமெரிக்க டொலர் கடத்தல் முறியடிப்பு

போலி அமெரிக்க டொலர் நோட்டுக்களை அச்சிட்டு இலங்கைக்கு கடத்தி வந்த கும்பல் ஒன்று அகப்பட்டுள்ளதாக விசேட பொலிஸ் பிரிவுத் தலைவர் பி உடுகம்பல (டி ஐ ஜி) தெரிவித்தார்.

சிங்கப்பூரில் இருந்து இது இலங்கைக்கு கடத்தப்படுவதாகக் கூறிய அவர், இதனைக் கடத்தியவர்களின் விவரத்தையோ, கடத்திய முறைபற்றியோ தெரிவிக்கவில்லை.

இந்தப் போலி டொலர்களை இங்கு வரும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு செலுத்தி தமது வியாபாரத்தைக் கடத்தல் காரர் செல்வதாகவும் அவர் சொன்னார்.

## மொனராகலை தோட்ட சம்பவம் இருதமிழர் மரணம்

கடந்த செவ்வாய்க்கிழமை மொனராகல பாராவல தோட்டத்தில் இடம்பெற்ற காடையர் அட்டகாசத்தினால் இரு தமிழர் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் இவர்கள் இருவரும் அடங்குவர்.

இன்னமும் இங்குள்ளதோட்டத் தொழிலாளர் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புத்தரப்படும் என உறுதி மொழி கூறிய மறுநாளும் இங்கு தாக்குதல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. 38

## சமசமாஜக்கட்சிக்கு இனவாதம் இல்லையாம்!

"லங்காசமசமாஜக்கட்சி இனவாதம் இல்லாத ஒரே கட்சி இதனைத் தமிழர்களும் அறிவார்கள்" என்றார் கேகாலை மாவட்ட எம் பியும் சமசமாஜக்கட்சி பிரமுகருமான அதாவுட செனிவிரத்ன

மியன விற்றத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

காலஞ்சென்ற டாக்டர் என். எம். பெரேரா, தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கோரி தேர்தலில் இறங்கிய போது வடபகுதி அரசியல் வாதிகள் அவருக்கு ஆதரவு தரவில்லை அன்று ஆதரவளித்து எமது கட்சி வெற்றி பெற்றிருந்தால் வடக்கு கிழக்கு பகுதியில் இன்றைய நிலை தோன்றியிருக்காது என்றார். (48)

## ஹுசையின் கணேசலிங்கம் கொழும்பில் கடும் போட்டி

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில போட்டியிடும் அதன் பொருளாளர் க, கணேசலிங்கத்துக்கும், மேயர் ஹுசைன் மொகமட்டுக்கும் கடும் போட்டி நிலவுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருவரும் சேரி மக்களின் வழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போவதாகவும், தாமே மேயராக வருவோம் எனவும் பிரசாரம் செய்து வருகின்றனர். 38

---

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லஷ்மி'பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 01-05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.